**ஜூலை – 27**

# TNPSC துளிகள்

- கணிதம் மற்றும் அறிவியலில் pi (π) எனும் எண்ணையும் அதன் முக்கியத்துவத்தையும் கொண்டாடும் விதமாக ஜூலை 22 (22/7) ஆம் தேதியன்று pi (π) தோராயமாக்கல் தினம் ஆனது, "Math Made Simple" என்ற கருத்துருவுடன் எளிமை பொருந்திய கற்றலை ஊக்குவிப்பதற்காக அனுசரிக்கப்பட்டது.

# தமிழ்நாடு செய்திகள்

## 1000 ஆண்டுகள் பழமையான சோழ கங்கம் ஏரி

- தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் சுமார் 12 கோடி ரூபாய் செலவில் 'சோழ கங்கம்' ஏரி மேம்படுத்தப்படும் என்று அறிவித்தார்.
- மேலும் அந்த இடத்தில் சுமார் 7.25 கோடி ரூபாய் செலவில் சுற்றுலா நடவடிக்கைகள் மேம்படுத்தப்படும் என்றும் அவர் அறிவித்தார்.
- இந்த ஆண்டு ஜூலை 23 ஆம் தேதியன்று வரும் ஆடி திருவாதிரை அன்று புகழ்பெற்ற தமிழ் மன்னர் முதலாம் இராஜேந்திர சோழனின் பிறந்த நாளில் இது அறிவிக்கப் பட்டது.
- சோழ கங்கம் ஆனது 'பொன்னேரி' என்றும் அழைக்கப்பட்டது.
- இது மன்னர் முதலாம் இராஜேந்திர சோழனால் வெட்டப்பட்டது.
- திருவாலங்காடு செப்புத் தகடுகளின்படி, அவரது வடக்கு நோக்கியப் படையெடுப்பைக் கொண்டாடுவதற்காக இது வெட்டப்பட்டது.
- முதல்வர் வெளியிட்ட அறிவிப்பின்படி, 700 ஏக்கர் பரப்பளவில் பரந்து விரிந்துள்ள இக்குளத்தின் கரைகள் பலப்படுத்தப்படும்.
- ஆடி திருவாதிரையில் புகழ்பெற்ற தமிழ் மன்னர் முதலாம் இராஜேந்திர சோழனின் பிறந்த நாளைத் தமிழக அரசு 2021 ஆம் ஆண்டு முதல் கொண்டாடி வருகிறது.




## காஞ்சிபுரம் இட்லிக்குப் புவிசார் குறியீடு

- தமிழ்நாடு உணவுப் பதப்படுத்துதல் மற்றும் வேளாண் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம் (TNAPEx) புவி சார் குறியீடு பெறுவதற்கு விண்ணப்பத்தைத் தாக்கல் செய்துள்ளது.

- இது பிரபலமான கோயில் இட்லி அல்லது காஞ்சிபுரம் இட்லிக்குப் புவிசார் குறியீடு (GI) என்ற அடையாளத்தைக் கோருகிறது.
- இது அரைத்தப் புழுங்கல் அரிசி மற்றும் உளுந்து ஆகியவற்றைப் பயன்படுத்தித் தயாரிக்கப் படுகிறது
- இது அடர்த்தியான மற்றும் நொறுங்கிய தானிய அமைப்பை அளிக்கிறது
- இது மென்மையான மற்றும் பஞ்சு போன்ற தென்னிந்திய இட்லியைப் போலிருக்காது.
- இது அந்த நகரத்தில் உள்ள ஸ்ரீவரதராஜப் பெருமாள் கோவிலில் வழங்கப்படும் பிரசாதங்களில் ஒன்றாகும்.
- இந்த நகரம் பெரும்பாலும் பட்டுப் புடவைகளுக்குப் பெயர் பெற்றது ஆகும்.
- மதுரை வேளாண் வணிகப் புத்தாக்க மன்றம் ஆனது இந்த விண்ணப்பத்தினை தாக்கல் செய்துள்ளது.
- மதுரை வேளாண் வணிகப் புத்தாக்க மன்றம் என்பது NABARD வங்கி மற்றும் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் ஒரு முன்னெடுப்பாகும்.





## 2024/25 ஆம் ஆண்டில் தனி நபர் நிகர மாநில உள்நாட்டு உற்பத்தி

- தனிநபர் நிகர மாநில உள்நாட்டு உற்பத்தியில் தமிழ்நாடு மாநிலமானது நாட்டிலேயே இரண்டாவது இடத்தில் உள்ளது.
- கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு அதிகமாக 9.69 சதவீத வளர்ச்சி பதிவாகி உள்ளது.
- 2024–25 ஆம் ஆண்டிற்கான கர்நாடகாவின் தனிநபர் வருமானம் அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் மிக உயர்ந்ததாகும்.
- இது 2 லட்சம் ரூபாய் வரம்பைத் தாண்டியது.
- கடந்த பத்தாண்டுகளில் கர்நாடகாவின் வருமானம் கிட்டத்தட்ட இரு மடங்காக அதிகரித்து, பெரும்பாலான முக்கிய மாநிலங்களை விட சிறப்பான செயல்திறனைக் கொண்டுள்ளது.
- தேசியப் புள்ளிவிவர அலுவலகம் வெளியிட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியின் தற்காலிக மதிப்பீடுகளின் படி இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.
- தேசியப் புள்ளி விவர அலுவலகம் மத்தியப் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க

அமைச்சகத்தின் கீழ் உள்ளது.

- 2024-25 ஆம் ஆண்டிற்கான நிலையான அல்லது அடிப்படை விலையில் தனி நபர் நிகர தேசிய வருமானம் 1,14,710 ஆக இருந்தது.
- இது ஒரு தசாப்தத்திற்கு முன்பு 72,805 ரூபாயாக இருந்த மதிப்பில் இது 57.6 சதவீத வளர்ச்சியைக் குறிக்கிறது.
- இந்த காலக் கட்டத்தில் தமிழ்நாட்டிற்கான தனி நபர் நிகர தேசிய வருமானம் 1,96,309 ரூபாயாக இருந்தது.
- ஒரு தசாப்த கால வளர்ச்சியில், கர்நாடகா 93.6% அதிகரிப்புடன் நாட்டில் இரண்டாவது இடத்தில் உள்ளது.
- இது 96.7% அதிகரிப்பைப் பதிவு செய்த ஒடிசாவிற்குச் சற்றுப் பின்னால் உள்ளது.
- 2023-24 ஆம் ஆண்டில், மிசோரம் 125.4% அளவு வளர்ச்சியையும், அதைத் தொடர்ந்து குஜராத் (90.7%), கோவா (89.9%), கர்நாடகா (88.5%), தெலுங்கானா (84.3%) மற்றும் ஒடிசா (83.4%) ஆகிய மாநிலங்களும் அதிக வருடாந்திர வளர்ச்சியைப் பதிவு செய்தன.
- பத்தாண்டுகளில் பஞ்சாப் 41.3% வளர்ச்சியை மட்டுமே பதிவு செய்தது என்ற நிலையில், உத்தரக்காண்ட் 33.5% அளவில் வளர்ச்சியடைந்துள்ளது மற்றும் புதுச்சேரியானது அனைத்து பதிவிடப்பட்ட மாநிலங்களிலும் மிகக் குறைவாக 32.8% அளவினை மட்டுமே பதிவு செய்துள்ளது.
- பொருளாதார மேம்பாட்டின் மாறுபட்ட நிலைகள், துறைசார் அமைப்பு, கட்டமைப்பு சார்ந்த கட்டுப்பாடுகள் மற்றும் நிர்வாகத் தரம் ஆகியவை சீரற்ற வளர்ச்சிக்குக் காரணம் என்று அமைச்சகம் கூறியுள்ளது.
- இருப்பினும், 2024-25 ஆம் ஆண்டிற்கான முழுமையானத் தரவுகள் இன்னும் பல மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களிடம் இருந்து கிடைக்கவில்லை.
- அருணாச்சலப் பிரதேசம், கோவா, குஜராத், ஜார்க்கண்ட், கேரளா, மிசோரம், நாகாலாந்து, சிக்கிம், திரிபுரா, உத்தரப் பிரதேசம், அந்தமான் & நிக்கோபார் தீவுகள், சண்டிகர், டெல்லி மற்றும் லடாக் உள்ளிட்டவை அரசாங்கத்தின் பதிலில் 'தரவுகள் கிடைக்கப் பெறவில்லை' எனக் குறிக்கப் பட்டுள்ளன.




## இரண்டாம் அலகின் முதல்நிலை ஒருங்கிணைப்பு

- நெய்வேலி உத்தரப் பிரதேச மின் நிறுவனம் (NUPPL) என்பது NLC இந்தியா லிமிடெட் மற்றும் உத்தரப் பிரதேச இராஜ்ய வித்யுத் உத்பதன் நிகாம் லிமிடெட் ஆகியவற்றின் ஒரு கூட்டு முயற்சியாகும்.
- உத்தரப் பிரதேசத்தின் கடம்பூர் தாலுக்காவில் உள்ள NUPPL நிறுவனத்தின் 1980 மெகா

வாட் திறன் கொண்ட மிகை மாறுநிலை வெப்பநிலை மற்றும் அழுத்த அனல் மின் நிலையத்தின் இரண்டாம் (660 மெகாவாட்) அலகின் மின் உற்பத்தி இயந்திரத்தின் (TG) சுழற்சி மற்றும் ஒருங்கிணைப்பினை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளது.

- சுமார் 765 kV கட்டமைப்புடன் அனல் மின் நிலையத்தின் ஒருங்கிணைப்பு, ஒரே மற்றும் தடையற்ற முயற்சியில் மேற்கொள்ளப்பட்டது.
- இரண்டாம் அலகின் ஒருங்கிணைப்பானது, NUPPL அமைப்பின் வணிகச் செயல் பாட்டுப் பிரகடனத்தை (COD) நோக்கிய பயணத்தில் ஒரு மிக முக்கியமான படியைக் குறித்தது.




## மருங்கூர் அகழ்வாராய்ச்சி 2025

- கடலூர் மாவட்டத்தில் உள்ள மருங்கூர் அகழ்வாராய்ச்சியைத் தமிழ்நாடு மாநிலத் தொல்பொருள் துறை (TNSDA) நிறைவு செய்துள்ளது.
- இரும்புக் காலம் முதல் முந்தைய வரலாற்றுக் காலம் வரையிலான ஒரு குடியிருப்பு மற்றும் புதைவிட தளத்தில் இது அகழ்வாராய்ச்சி நடத்தி வந்தது.
- இது தென்பெண்ணை மற்றும் வட வெள்ளார் ஆறுகளுக்கு இடையில் அமைந்துள்ளது.
- இது பண்டைய கால நடுவில் மண்டலம் என்பதன் ஒரு பகுதியாக இருந்தது.
- இந்த இடத்தின் பல்வேறு பண்புகளை மதிப்பிடுவதற்கு ஆளில்லா வான்வழி வாகனம் (UAV) மூலமான வரைபடமிடுதல் மற்றும் LiDAR (ஒளியைப் பயன்படுத்தி கண்டறிதல் மற்றும் வரம்பினை அறிதல்) போன்ற தொலை உணர்திறன் நுட்பங்களைப் பயன்படுத்துகிறது.
- தமிழ்நாட்டில் குடியிருப்பு மேடும், அதனுடன் தொடர்புடைய புதைவிடத் தளமும் கண்டுபிடிக்கப் பட்ட சில இடங்களில் மருங்கூர் ஒன்றாகும்.
- இங்கு குடியிருப்பு மேடும் புதைவிட தளமும் சராசரி கடல் மட்டத்திலிருந்து 100 மீட்டர் உயரத்தில் அமைந்திருப்பது தெரியவந்தது.
- 2024 ஆம் ஆண்டு ஜூன் 18 ஆம் தேதியன்று அரசு, இதனை மாநிலத்தின் தலைமைச் செயலகத்திலிருந்து மருங்கூரில் தொல்பொருள் அகழ்வாராய்ச்சியைத் தொடங்கியது.
- சிவகங்கை மாவட்டத்தில் கீழடி மற்றும் அதன் தொகுப்பு (கொந்தகை); விருதுநகரில் வெம்பக்கோட்டை; திருவண்ணாமலையில் கீழ்நமண்டி; புதுக்கோட்டையில் பொற்பனைக்கோட்டை; தென்காசியில் திருமலாபுரம்; கிருஷ்ணகிரியில் சென்னனூர்; மற்றும் திருப்பூரில் கொங்கல்நகரம் ஆகிய இடங்களின் அகழ்வாராய்ச்சிகளுடன் இது மேற்கொள்ளப் பட்டது.

- மருங்கூரில் உள்ள ஒரு முதுமக்கள் தாழி புதைவிட இடத்தில் தமிழ் பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்ட மூன்று மட்பாண்டத் துண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.
- தமிழ்நாட்டில் உள்ள எந்தவொரு தொல்பொருள் தளத்திலிருந்தும், பொதுவாக முதுமக்கள் தாழி புதைவிட இடத்தில் கல்லறைப் பொருட்களாக வைக்கப்படும் தமிழ் பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பானைகள் கண்டெடுக்கப்படுவது இதுவே முதல் முறை ஆகும்.
- அதில் ஒன்றில் "அ-தி-ய்(அ)-க-ன்" என்றும், மற்றவற்றில் "அ-மா-ன்" மற்றும் "அ-த" என்றும் பொறிக்கப்பட்டுள்ளது.
- இந்தப் பொறிக்கப்பட்ட மட்பாண்டத் துண்டுகள் பழங்காலவியல் அடிப்படையில் கிமு இரண்டாம் அல்லது மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாக இருக்கலாம்.
- தமிழ்-பிராமி எழுத்துகள் கொண்ட பானைத் துண்டுகள், சுடுமண்பாண்டங்கள், நுண் கற்கள், மணிகள், எலும்புக் கருவிகள், சங்கு ஓடுகள், இரும்புக் கருவிகள், ஆண்டிமனி தண்டுகள் மற்றும் சோழர் கால நாணயங்கள் உட்பட 95 பொருட்களும் இங்கு கண்டெடுக்கப்பட்டன.
- செறிவான லேட்டரைட் கல் வட்டங்கள் கொண்ட பெருங்கற்கால பானைத் துண்டுகள், கல்லறைப் பொருட்கள், இரும்பு வாள்கள் மற்றும் ஜாஸ்பர் மணிகள் இங்கு கண்டெடுக்கப் பட்டன.
- அகழி அடுக்குகள் 6 மீட்டர் வரை தெளிவான மானுடவியல் செயல்பாட்டைக் காட்டின என்பதோடு இது அங்கு தொடர்ச்சியான ஆக்கிரமிப்பு இருந்தததையும் வெளிப் படுத்தியது.
- கருப்பு மற்றும் சிவப்பு மட்பாண்டம், சிவப்பு மட்பாண்டம், செம்பூச்சு மட்கலன், கரடு முரடான மேற்பரப்புடைய சிவப்பு மட்பாண்டம், நுணுக்கமான வடிவமைப்புகளைக் கொண்ட கூரிய பல் அமைப்பு கொண்ட பாத்திரங்கள், சாம்பல் நிற கூரிய பல் அமைப்பு கொண்ட பாத்திரங்கள், பழுப்பு நிற பூச்சு பூசப்பட்ட பாத்திரங்கள் மற்றும் துளையிடப்பட்ட பாத்திரங்கள் உள்ளிட்ட பல்வேறு பானைத் துண்டுகள் இந்த அகழ்வாராய்ச்சியின் போது கண்டுபிடிக்கப்பட்டன என்பதோடு இது பீங்கான் பயன்பாட்டில் குறிப்பிடத்தக்க பன்முகத்தன்மையைக் குறிக்கிறது.
- அவற்றில் சில சிந்து நதி அடையாளங்களை ஒத்த வரைபடங்களைக் கொண்டிருந்த படங்களை கொண்ட 12 பானைத் துண்டுகளும் அடங்கும்.
- மட்பாண்டங்கள் மற்றும் சுடுமண் பாண்டச் சக்கரங்களின் மேற்பரப்பை மெருகூட்டப் பயன்படுத்தப்படும் பல மெருகேற்றுக் கருவிகளும் இங்கு கண்டெடுக்கப்பட்டன.
- இங்கு தோண்டி எடுக்கப்பட்ட ஆண்டிமனி தண்டுகளின் மழுங்கிய விளிம்புகள் அவை அலங்கார நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டதைக் குறிக்கின்றன.
- முதலாம் இராஜராஜ சோழன் காலத்தைச் சேர்ந்த ஓர் இடைக்கால செப்பு நாணயமும் இங்கு மேல் அடுக்குகளிலிருந்து கண்டெடுக்கப்பட்டது.
- அதே பாறைப்படிவியல் அடுக்கிலிருந்து மீட்டெடுக்கப்பட்ட நிலக்கரி மாதிரிகள் கதிரியக்கக் காலக் கணிப்பு மற்றும் சூழ்நிலைப் பகுப்பாய்வுக்கான வாய்ப்பையும் வழங்கியது.
- 7 செ. மீ நீளம் கொண்ட ஓர் சங்கு உள்ளிட்ட இரண்டு சங்குகளின் உள் ஓடுகள் 3.6 மீட்டர் ஆழத்தில் கண்டெடுக்கப்பட்டன.
- மூன்று துண்டுகளாக உடைக்கப்பட்ட, 22.97 கிராம் எடையும் 2.8 மி.மீ தடிமனும் கொண்ட 13 செ.மீ நீளமுள்ள இரும்புக் கத்தியும் இங்கு 2.57 மீட்டர் ஆழத்தில் இருந்து கண்டெடுக்கப் பட்டது.
- ஒரு முந்திரித் தோப்பில் அமைந்துள்ள புதைவிடத்தில், தொல்பொருள் அறிவியல்


ஆராய்ச்சியாளர்கள் இரண்டு அகழிகளைத் தோண்டினர்.

- அங்கு அகழ்வாராய்ச்சியின் போது, இரண்டு லேட்டரைட் கல் வட்டங்கள் அடையாளம் காணப்பட்டது, இது பெருங்கற்கால புதைவிடங்கள் இங்கு இருப்பதை உறுதிப் படுத்தியது.
- முதல் பெருங்கற்கால அமைப்பு ஆனது, எட்டு மீட்டர் விட்டம் கொண்ட ஒரு லேட்டரைட் கல் வட்டத்தை வெளிப்படுத்தியது.
- இந்த வட்டத்தின் மேற்பரப்பு சிறிய லேட்டரைட் கற்களால் மூடப் பட்டிருந்தது.
- இது இரண்டு பெரிய கல் வட்டங்களை வெளிக்கொணர்ந்தது.
- அவை நடுத்தர அளவிலான லேட்டரைட் கற்களால் ஆன உள் வட்டமாகவும், பெரிய கற்களின் வெளிப்புற அமைப்பாகவும் இருந்தன.
- இந்தக் கல் வட்டம் முறையான அகழ்வாராய்ச்சிக்காக நான்கு பகுதிகளாகப் பிரிக்கப் பட்டது.
- இதன் ஆரம்ப அடுக்குகள் கடினமான லேட்டரைட் கற்களைக் கொண்டிருந்தன.
- இதன் மையத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு பெரிய கேப்ஸ்டோன் கீழே உள்ள புதைக்கப்பட்ட முதுமக்கள் தாழியைப் பாதுகாக்க வைக்கப் பட்டது.
- இந்த முதுமக்கள் தாழி ஒரு லேட்டரைட் அடிவாரக் குழிக்குள் வைக்கப்பட்டது.
- இரண்டாவது பெருங்கற்காலப் புதைவிடப் பகுதியில், லேட்டரைட் அடுக்குகளுக்குக் கீழே, ஒரு மெல்லிய சிவப்பு மண் அடுக்கு காணப்பட்டது.
- அதிலிருந்து, சிவப்புப் பாண்டங்களால் செய்யப்பட்ட எட்டு முதுமக்கள் தாழிகள் வெவ்வேறு நிலைகளிலும் வெவ்வேறு அளவுகளிலும் தென்பட்டன.
- இந்த இரண்டு முதுமக்கள் தாழிகளுக்கு வெளியே இரும்பு வாள்களும், அதே நேரத்தில் முதுமக்கள் தாழிகளுக்குள் இரும்புப் பொருட்களும் கண்டெடுக்கப்பட்டன.
- இரண்டு அகழிகளிலும், முதுமக்கள் தாழிகளைச் சுற்றி படையல் பானைகள் கண்டெடுக்கப் பட்டன.
- இவற்றில் கருப்பு மற்றும் சிவப்பு பாண்டங்கள், சிவப்பு நிறப் பூச்சு பூசப்பட்ட பாண்டங்கள், கருப்பு நிறப் பூச்சு பூசப்பட்ட பாண்டங்கள் மற்றும் சிவப்பு நிறப் பாண்டங்கள் ஆகியவை அடங்கும்.
- இந்தக் கரி மாதிரிகள், அமெரிக்காவின் புளோரிடாவில் உள்ள பீட்டா ஆய்வு மையத்திற்கு, அதன் கால கணக்கீடு செய்வதற்காக துகள் முடுக்கி மூலமான திரள் நிறமாலை பகுப்பாய்விற்காக அனுப்பப்படும்.
- அதே சமயம் இங்கு சேகரிக்கப்பட்ட மகரந்த மாதிரிகள் பாண்டிச்சேரியின் பிரெஞ்சு நிறுவனத்திற்கு அனுப்பப்படும்.
- மேலும், தொல்பொருள்-தாவரவியல் ஆய்வுகள், பைட்டோலித் (திடத் தாவரப் பதிவுகள்) மற்றும் பாறையியல் பகுப்பாய்வுகள் மற்றும் ஒளியியல் ரீதியாக தூண்டப்பட்ட ஒளிர்வு மற்றும் வெப்ப ஒளிர்வு காலக் கணிப்பு ஆகியவை படிவுகள் மற்றும் மட்பாண்டங்களின் வெப்பம் அல்லது ஒளி வெளிப்பாடுகளைத் தீர்மானிக்கப் பயன்படுத்தப் படும்.
- சென்னை பல்கலைக்கழகம் ஏற்கனவே மருங்கூர் அருகே, காரைக்காடு மற்றும் குடிகாடு ஆகிய இடங்களில் அகழ்வாராய்ச்சிகளை நடத்தியது.
- இந்தத் தளம் புதுச்சேரி ஒன்றியப் பிரதேசத்தில் உள்ள அரிக்கமேடு மற்றும் மயிலாடு துறை மாவட்டத்தில் உள்ள பூம்புகார் போன்ற பழங்காலத் துறைமுக நகரங்களுக்கு அருகில் அமைந்துள்ளது என்பதால் மிக முக்கியத்துவம் வாய்ந்தது.
- 2025-26 ஆம் ஆண்டில் அகழ்வாராய்ச்சிகளை நடத்துவதற்காக மருங்கூரிலிருந்து

கிட்டத்தட்ட 30 கி.மீ தொலைவில் உள்ள மணிக்கொல்லையில் முதற்கட்ட ஆய்வுகளை மேற்கொள்ள தமிழ்நாடு மாநிலத் தொல்பொருள் துறை திட்டமிட்டுள்ளது.




## தமிழ்நாடு மொழியியல் வரைபடம்




- தமிழ்நாட்டின் மொழியியல் விவரம் ஆனது பல்வேறு வகையான மொழிகளை வெளிப் படுத்துகிறது.
- தெலுங்கு, கன்னடம், உருது, மலையாளம் மற்றும் ஆங்கிலம் ஆகியவை இதில் அடங்கும்.
- இது இந்த மாநிலத்தின் மிகவும் வளமான மொழியியல் பன்முகத்தன்மையைப் பிரதிபலிக்கிறது.
- இது 2011 ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் மொழியியல் வரைபடத்தில் தெளிவாகப் பதிவாகியுள்ளது.
- இது உள்துறை அமைச்சகத்தின் அரசுப் பொதுப் பதிவாளர் மற்றும் மக்கள் தொகை

கணக்கெடுப்பு ஆணையர் அலுவலகத்தால் வெளியிடப்பட்டது.

- இம்மாநிலத்தின் மொத்த மக்கள் தொகை 7,21,47,030 ஆகும், இது 32 மாவட்டங்களில் 1,30,060 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் பரவியுள்ளது (2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி).
- இதில், 7,20,98,315 பேர் (99.93%) இந்திய அரசியலமைப்பின் எட்டாவது அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ள 22 மொழிகளில் ஒன்றைப் பேசுவதாகக் கூறினர்.
- 48,715 பேர் (0.07%) மட்டுமே பிற மொழிகளைப் பேசினர்.
- 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் போது தமிழ்நாட்டின் நிர்வாக எல்லைகளுக்குள் மொத்தம் 96 மொழிகள் அடையாளம் காணப்பட்டன.
- இந்த மொழி வரைபடத்தில், 'மொழி பேசுபவர்கள்' என்ற சொல் மக்கள் தொகை கணக்கெடுப்பின் போது ஒரு குறிப்பிட்ட மொழியை தங்கள் தாய்மொழியாக குறிப்பிட்ட நபர்களை மட்டுமே குறிக்கிறது.
- இந்த எண்ணிக்கையானது, அந்த மொழியை அவர்கள் பேசினாலும், மக்கள் தொகை கணக்கெடுப்பில் அதைத் தங்கள் தாய்மொழியாக அறிவிக்காதவர்களை விலக்கி குறிப்பிடுகிறது.
- தமிழ்நாட்டில் பட்டியலிடப்பட்ட மொழிகளில், மொத்தம் 6,37,53,997 பேர் தமிழ் மொழியை பேசுகின்றனர்.
- மக்கள் தொகை கணக்கெடுப்பு அட்டவணையில் அவர்கள் தமிழைத் தங்கள் தாய் மொழியாக அறிவித்தனர்.
- இதில் தமிழ் மொழிக் குழுவுடன் தனது தாய்மொழிகளின் கீழ் வகைப்படுத்தப்பட்ட 10,150 நபர்களும் அடங்குவர்.
- இதைத் தொடர்ந்து தெலுங்கு பேசுபவர்கள் 42,34,302 பேர், கன்னடம் பேசுபவர்கள் 12,86,175 பேர், உருது பேசுபவர்கள் 12,64,537 பேர், மலையாளம் பேசுபவர்கள் 7,26,096 பேர், இந்தி பேசுபவர்கள் 3,93,380 பேர், குஜராத்தி பேசுபவர்கள் 2,75,023 பேர் மற்றும் மராத்தி பேசுபவர்கள் 85,454 பேர் ஆகியோர் அடங்குவர்.
- பட்டியலிடப்படாத மொழிகளில், ஆங்கிலம் பேசுபவர்கள் அதிகபட்சமாக 24,495 பேர் உள்ள நிலையில், அதைத் தொடர்ந்து துளு பேசுபவர்கள் 2,636 பேர், பிலி/பிலோடி பேசுபவர்கள் 1,405 பேர், அரபு/அர்பி பேசுபவர்கள் 1,119 பேர் மற்றும் குருக்/ஓரான் பேசுபவர்கள் 817 பேர் ஆக உள்ளனர்.
- மொழித் திறனின் அடிப்படையில் தமிழ்நாடு மாநிலம் பெரும்பாலும் ஒருமொழி பேசும் மாநிலமாகவே உள்ளது.
- 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, 5,17,30,760 பேர் (71.70%) ஒரே ஒரு மொழியை மட்டுமே பேசினர்.
- மும்மொழி பேசுபவர்களைத் தவிர்த்து, இருமொழி பேசுபவர்களின் எண்ணிக்கை 1,79,69,107 (24.90%) உள்ளதாக கூறப்படும் அதே நேரத்தில் 24,47,163 பேர் (3.39%) மூன்று மொழிகளைப் பேசுவதாகக் கூறப்படுகிறது.
- இந்த மொழி வரைபடமானது, தங்கள் தாய்மொழியா அல்லது தாய்மொழி இல்லையா என்பதைப் பொருட்படுத்தாமல், பல்வேறு மொழிகளைப் பேச முடியும் என்று தெரிவித்த நபர்களின் எண்ணிக்கையையும் பதிவு செய்துள்ளது.
- தமிழ்நாட்டில், மொத்தம் 6,94,04,292 பேர் (96.20%) தங்களால் தமிழ் பேச முடியும் என்று தெரிவித்துள்ளனர்.
- இதனை அடுத்து 1,33,37,789 பேர் (18.49%) தங்களால் ஆங்கிலம் பேச முடியும் என்று தெரிவித்துள்ளனர்.

- மொத்தம் 58,04,634 பேர் தெலுங்கு (8.05%) மொழியும், 18,70,602 பேர் கன்னடம் (2.59%) மொழியும் மற்றும் 15,24,049 பேர் இந்தி (2.11%) மொழியும் பேசத் தெரிந்தவர்கள் என்று தெரிவித்தனர்.
- மேலும் 10,08,468 பேர் மலையாளம் (1.40%) பேசத் தெரிந்தவர்கள் என்று தெரிவித்தனர்.

## திறன் திட்டம் 2025





- தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை, ஆறாம் வகுப்பு முதல் ஒன்பதாம் வகுப்பு வரையில் பயிலும் மாணவர்களிடையே உள்ள கற்றல் இடைவெளிகளைக் குறைக்க, திறன் முன்னெடுப்பை (சீரமைப்பு மற்றும் கல்வி வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான இலக்கு சார் உதவி) தொடங்கியுள்ளது.
- இந்தத் திட்டம் ஆங்கிலம், தமிழ் மற்றும் கணிதப் பாடங்களில் மாணவர்களின் தேர்ச்சியை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டமானது அரசுப் பள்ளிகளில் பள்ளி நேரங்களில் செயல்படுத்தப்படும்.
- இந்த முன்னெடுப்பானது ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் சுமார் 13 லட்சம் மாணவர்களுக்குப் பயனளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- வருமான வாய்ப்புகளை மேம்படுத்துவதற்காக, நகை தயாரித்தல் மற்றும் தையல் போன்ற தொழில் திறன்கள் ஆனது இதற்குரிய சமூகப் பங்களிப்பு ஆதரவுடன் வயது வந்தோர் எழுத்தறிவு மையங்கள் மூலம் வழங்கப்படும்.
- அரசு உயர்நிலைப் பள்ளிகளில் மொத்தமாக 12,000 தொழிற்கல்வி பயிலும் மாணவர்களுக்கு 13 கோடி ரூபாய் செலவில் அரசு தொழிற்துறைப் பயிற்சி நிறுவனங்கள் (ITI) மற்றும் மாநில திறன் மையம் மூலம் பயிற்சி அளிக்கப்படும்.
- மாணவர்களிடையே வாசிப்புத் திறனை மேம்படுத்த வாசிப்புச் சவால்கள் மற்றும் கதை சொல்லும் திறன் அமர்வுகள் போன்ற முன்னெடுப்புகள் நடத்தப்படும்.
- கலைத் திருவிழா போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கென கலைச் சிற்பி என்ற பெயரில் கோடைக்கால முகாம் ஏற்பாடு செய்யப்படும்.
- இசைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு கல்வித்துறை நடத்தும் மொழித்

தேர்வுகளில் தேர்ச்சி பெற்றவுடன் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்புக்கு இணையான சான்றிதழ்கள் வழங்கப்படும்.

# தேசியச் செய்திகள்


## இந்தியாவில் செம்பனை எண்ணெய் உற்பத்தி 2024




- சமீபத்தில், இந்தியாவானது மலேசியாவின் மிகப்பெரிய முளைவிட்ட செம்பனை விதைகளை இறக்குமதி செய்யும் நாடாக உருவெடுத்துள்ளது.
- 2024 ஆம் ஆண்டில் இந்தியா மலேசியாவிலிருந்து 3.03 மில்லியன் டன் செம்பனை எண்ணெயை இறக்குமதி செய்தது.
- இது மலேசியாவின் மொத்த செம்பனை எண்ணெய் ஏற்றுமதியில் 17.9% பங்கினைக் குறிக்கிறது.
- இது இந்தியாவை மலேசிய செம்பனை எண்ணெய்க்கான ஒரு முதன்மையான சந்தையாக மாற்றுகிறது.
- செம்பனை எண்ணெய் தற்போது உலகில் அதிகம் நுகரப்படும் தாவர எண்ணெய் ஆகும்.
- உலகின் மிகப்பெரிய செம்பனை எண்ணெய் நுகர்வு நாடுகள் இந்தியா, சீனா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் (EU) ஆகியவை ஆகும்.
- 2025-26 ஆம் ஆண்டிற்குள் செம்பனை சாகுபடியை 1 மில்லியன் ஹெக்டேராக விரைவாக விரிவுபடுத்த இந்தியா இலக்கு வைத்துள்ளது.
- 2019-20 ஆம் ஆண்டில் இது 3.5 லட்சம் ஹெக்டேராக இருந்தது.
- 2025 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் செம்பனை சாகுபடியின் கீழ் நடப்பு நிலப்பரப்புப் பயன்பாடு 3, 70,000 ஹெக்டேராக உள்ளது.
- மேலும் தேசிய சமையல் எண்ணெய்கள் - செம்பனை திட்டத்தின் கீழ் 2029-30 ஆம் ஆண்டிற்குள் சுமார் 2.8 மில்லியன் டன் கச்சா செம்பனை எண்ணெய் உற்பத்தியை அடைய இந்தியா இலக்கு வைத்துள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ் சிறப்பு கவனம் செலுத்தப்படும் பகுதிகள் வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் தீவுப் பகுதிகள் ஆகும்.

- தற்போதைய மலேசியாவின் வணிக ரீதியான விதைகளின் முறையான வேளாண் நடைமுறைகள் மற்றும் போதுமான நீர்ப்பாசனத்துடன் இந்தியாவில் சாகுபடிக்கு ஏற்றவையாக உள்ளன.

## இந்தியாவின் அறிவுசார் சொத்துத் தாக்கல்கள் 2020-2025





- கடந்த ஐந்து ஆண்டுகளில் அறிவுசார் சொத்துத் தாக்கல்களில் இந்தியா கணிசமாக 44% அதிகரிப்பைக் கண்டுள்ளது.
- இது முதன்மையாக உத்தி சார் கொள்கைச் சீர்திருத்தங்கள் மற்றும் வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தினால் மேற்கொள்ளப்பட்ட விரிவான எண்ணிம மயமாக்கல் முன்னெடுப்புகளால் உந்தப்பட்ட ஒரு மேம்பாடாகும்.
- இந்தியக் குடிமக்களிடமிருந்து பெறப்பட்ட மொத்த அறிவுசார் சொத்துத் தாக்கல்களுக்கான விண்ணப்பங்களின் எண்ணிக்கை 2020-21 ஆம் ஆண்டில் 477,533 என்ற அளவிலிருந்து 2024-25 ஆம் ஆண்டில் 689,991 ஆக அதிகரித்தது.
- புவிசார் குறியீடுகள் (GI) மேற்கொண்டப் பதிவுகள் சுமார் 380% என்ற அளவிற்கு உயர்ந்த நிலையில் அது குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் காட்டியது.
- அதைத் தொடர்ந்து வடிவமைப்புகள் (266%), காப்புரிமைகள் (180%), பதிப்புரிமைகள் (83%), வர்த்தக முத்திரைகள் (28%), மற்றும் குறைக் கடத்திகள் ஒருங்கிணைந்தச் சுற்றுகள் தளவமைப்பு-வடிவமைப்புகள் (SILCLD) (20%) ஆகியன உள்ளன.
- முக்கியச் சீர்திருத்தங்களில் அறிவுசார் சொத்துக்களுக்கான சட்டங்கள் மற்றும் அதன் விதிகளை எளிமைப்படுத்துதல், காப்புரிமை ஆவணங்களைக் கட்டாயமாக மின்னணு முறையில் சமர்ப்பித்தல் மற்றும் இயங்கலை வழி காப்புரிமைத் தாக்கல்களுக்கான 10% கட்டணக் குறைப்பு ஆகியவை அடங்கும்.
- காப்புரிமைகளுக்கான தேர்வு காலம் 31 மாதங்களாகக் குறைக்கப்பட்டுள்ளது, மேலும் 'காப்புரிமைகளின் செயல்பாட்டு அறிக்கைகளை' தாக்கல் செய்வதற்கான காலக் கெடு தற்போது மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை ஆகும்.
- 'IP Sarthi Chatbot' மற்றும் தேசிய அறிவுசார் சொத்து விழிப்புணர்வுத் திட்டம் (NIPAM) போன்ற முன்னெடுப்புகள் அறிவுசார் சொத்து மீதான விழிப்புணர்வை மேலும் வலுப்படுத்தியுள்ளன.

- இன்று வரை, 697 புவிசார் குறியீடுகள் வெற்றிகரமாகப் பதிவு செய்யப் பட்டுள்ளன.

## அப்பாச்சி ஹெலிகாப்டர்கள் முதல் தொகுதி

- இந்திய இராணுவமானது அமெரிக்காவிலிருந்து முதல் தொகுதி அப்பாச்சி ஹெலிகாப்டர்களைப் பெற உள்ளது.
- அப்பாச்சி AH-64E என்பது போயிங் நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட ஒரு போர்த் தாக்குதல் திறன் கொண்டுள்ள பல்முனைத் தாக்குதல் திறன் கொண்ட ஹெலிகாப்டர் ஆகும்.
- இந்திய விமானப்படை 2019 ஆம் ஆண்டில் அப்பாச்சி ரக ஹெலிகாப்டர்களை படையில் இணைத்தது.
- ஆனால் இந்திய இராணுவத்தில் இது சேர்க்கப்பட்டது இதுவே முதல் முறையாகும்.




# சர்வதேசச் செய்திகள்

## அமெரிக்கா மற்றும் யுனெஸ்கோ 2025

- ஐக்கிய நாடுகள் சபையின் கலாச்சார முகமையான யுனெஸ்கோவை விட்டு வெளியேறுவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.
- இது அதனுடன் மீண்டும் இணைந்த இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.
- இது 2017 ஆம் ஆண்டு டிரம்பின் முதல் பதவிக் காலத்தில் எடுக்கப்பட்ட முடிவை மீண்டும் மேற்கொள்ளப்படுவதைக் குறிக்கிறது.
- அதை 2023 ஆம் ஆண்டில் அதிபர் ஜோ பைடன் மாற்றியமைத்தார்.
- இந்த முடிவு "America First" என்ற அதன் வெளியுறவுக் கொள்கையைப் பிரதிபலிக்கிறது.
- அமெரிக்கா யுனெஸ்கோவை விட்டு வெளியேறுவது இது மூன்றாவது முறையாகும்.
- மேலும் டிரம்ப் நிர்வாகத்தின் போது இத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளப்படுவது இது இரண்டாவது முறையாகும்.
- இந்த முடிவு 2026 ஆம் ஆண்டு டிசம்பர் மாத இறுதியில் நடைமுறைக்கு வரும்.
- அமெரிக்கா முன்னர் 1984 ஆம் ஆண்டில் ரீகன் நிர்வாகத்தின் கீழ் யுனெஸ்கோவிலிருந்து வெளியேறியது.
- ஜார்ஜ் W. புஷ் அதிபராக இருந்த போது 2003 ஆம் ஆண்டில் அமெரிக்கா மீண்டும் யுனெஸ்கோவில் இணைந்தது.

- யுனெஸ்கோவின் நிதி ஒதுக்கீட்டில் அமெரிக்கா சுமார் 8% என்ற அளவிற்குப் பங்களிக்கிறது.
- 2011 ஆம் ஆண்டில் பாலஸ்தீனத்தை உறுப்பினர் நாடாகச் சேர்க்க யுனெஸ்கோ வாக்களித்தப் பின்னர் அமெரிக்காவும், இஸ்ரேலும் யுனெஸ்கோவிற்கு நிதியளிப்பதை நிறுத்தின.
- யுனெஸ்கோவின் தலைமையகம் பிரான்சின் பாரிஸில் அமைந்துள்ளது.
- கல்வி, அறிவியல், கலாச்சாரம் மற்றும் தகவல் தொடர்பு ஆகியவற்றில் ஒத்துழைப்பு மூலம் உலகளாவிய அமைதியை வளர்ப்பதற்காக இது 1945 ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது.




## வனுவாட்டு மற்றும் சர்வதேச நீதிமன்றம்

- பசிபிக் நாடான வனுவாட்டு, சர்வதேச நீதிமன்றத்திற்கு (ICJ) பருவநிலை மாற்ற வழக்கைக் கொண்டு வருவதில் முக்கியப் பங்கு வகித்துள்ளது.
- இந்த வழக்கானது பசிபிக் தீவு நாடான வனுவாட்டுவால் முன்னெடுத்து நடத்தப் பட்டது.
- மேலும் இது 130க்கும் மேற்பட்ட உறுப்பினர் நாடுகளால் ஆதரிக்கப் படுகிறது.
- பருவநிலை மாற்றம் தொடர்பான உறுப்பினர் நாடுகளின் சட்டப்பூர்வக் கடமைகள் குறித்து ஒரு ஆலோசனைக் கருத்தை அது கோரியது.
- பருவநிலை மாற்றத்தைச் சமாளிப்பது குறித்து ஐ.நா.வின் உச்ச நீதிமன்றம் ஒரு முக்கிய முடிவை வழங்கி உள்ளது.
- பருவநிலை மாற்றம் மற்றும் அதன் விளைவுகளைச் சமாளிக்க உறுப்பினர் நாடுகள் கொண்டுள்ள கடமைகள் குறித்து ஆலோசனைக் கருத்தை அது வழங்கி உள்ளது.
- பருவநிலை மாற்றத்திலிருந்து புவியைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கத் தவறினால், அது சர்வதேச சட்டத்தை மீறுவதற்குச் சமம் என்று அது கூறியது.
- இந்தத் தீர்ப்பு பிணைப்பு சாராதது என்றாலும், அது சர்வதேசப் பருவநிலை சட்டத்தை மாற்றியமைக்கக் கூடும்.
- அமெரிக்காவும் ரஷ்யாவும் பெட்ரோலியத்தை உற்பத்தி செய்யும் முக்கிய நாடுகள் ஆகும்.
- அமெரிக்கா மற்றும் சீனா போன்ற முக்கியப் பசுமை இல்ல வாயு உமிழ்வு நாடுகள் உட்பட அனைத்து ஐ.நா. உறுப்பு நாடுகளும் இந்த நீதிமன்றத்தில் உறுப்பினர்களாக உள்ளன.

- கரிம வெளியேற்றக் குறைப்புகளை நீதிமன்றம் கட்டாயப்படுத்துவதை அவர்கள் கடுமையாக எதிர்க்கின்றனர்.
- கடந்த ஆண்டு, ஐரோப்பிய மனித உரிமைகள் நீதிமன்றம், உலக நாடுகள் தங்கள் மக்களை பருவநிலை மாற்றத்தின் விளைவுகளிலிருந்து சிறப்பாகப் பாதுகாக்க வேண்டும் என்று தீர்ப்பளித்தது.
- 2019 ஆம் ஆண்டில், நெதர்லாந்தின் உச்ச நீதிமன்றம், பருவநிலை சார்ந்த ஆர்வலர்களுக்கு முதல் மிகப்பெரிய சட்ட ரீதியிலான வெற்றியை வழங்கியது.
- வனுவாட்டுவைப் பொறுத்த வரை, இந்த வழக்கு ஓர் அரசியல் ரீதியிலானது அல்ல.
- இது நீதி, கண்ணியம் மற்றும் இருப்பு உரிமைக்கான ஒரு கோரிக்கை ஆகும்.
- வனுவாட்டு என்பது தெற்குப் பசிபிக் பெருங்கடலில் உள்ள ஒரு தீவுக் கூட்டம் ஆகும்.
- இது மெலனேசியாவின் ஒரு பகுதியாகும்
- இது வடக்கு ஆஸ்திரேலியாவின் கிழக்கிலும், பிஜியின் மேற்கிலும் அமைந்துள்ளது.
- இந்தத் தீவுகள் எரிமலைகள் அமைந்த ஒரு தீவாகும்.
- அவை மலைப்பாங்கான நிலப்பரப்புகள் மற்றும் கடலோர சமவெளிகளைக் கொண்டு உள்ளன.




## சுற்றுச்சூழல் செய்திகள்

### மட்டி வாயன் மீனின் மரபணு



A specimen of goldlined seabream (*Rhabdosargus sarba*).


- மத்திய உவர்நீர் மீன் வளர்ப்பு நிறுவனம் (Central Institute of Brackish water Aquaculture- CIBA)

ஆனது தங்க நிறக் கோடு கொண்ட கடல்நீர் மீனின் (ராப்டோசர்கஸ் சர்பா) மரபணுவை வெற்றிகரமாக வரிசைப்படுத்தியுள்ளது.

- இது சென்னையின் மத்திய உவர் நீர் மீன் வளர்ப்பு நிறுவனத்தின் (ICAR-CIBA) ஆராய்ச்சியாளர்களின் குழுவினால் மேற்கொள்ளப்பட்டது.
- இது தமிழில் மட்டி வாயன் என்று உள்ளூர்வாசிகளால் அழைக்கப் படுகின்றது.
- இந்தியாவின் மீன் வளர்ப்புத் துறையை விரிவுபடுத்துவதற்கான ஒரு நம்பிக்கைக்குரிய இனமாக இந்த இனம் கருதப்படுகிறது.
- இந்தியாவில் மிகவும் விரும்பப்படும் மீன் உணவுகளில் இந்த இனமும் ஒன்றாக உள்ளதோடு, உள்நாட்டுச் சந்தையில் இதற்கு அதிகத் தேவை உள்ளது.
- இது ஒரு யூரிஹலைன் (அதிக உப்புத் தன்மை வேறுபாடுகளைத் தாங்கி வாழும் திறன் கொண்ட உயிரினம்) இனமாகும்.
- இது பரந்த அளவிலான உப்புத்தன்மை கொண்ட மீன்களில் மீன் வளர்ப்பு செய்வதற்கான ஒரு வலுவான ஆற்றலைக் கொண்டுள்ளது.

## கிரேட் ருவாஹா ஆறு

- கிரேட் ருவாஹா ஆறு தெற்கு-மத்திய தான்சானியாவில் உள்ள ஒரு முக்கிய நதி ஆகும்.
- இது உசாங்கு ஈரநிலம் மற்றும் ருவாஹா தேசியப் பூங்கா வழியாக வட கிழக்கே பாய்கிறது.
- இது ருஃபிஜி படுகையின் ஒரு முக்கிய அங்கமாகும்.
- பருவநிலை மாற்றம் மற்றும் அதிகரித்து வரும் மனித நடவடிக்கைகளால் ஏற்படும் மோசமான மேலாண்மை காரணமாக இது வறண்டு வருகிறது.




# மாநிலச் செய்திகள்

## இந்தியாவின் முதல் சுரங்கச் சுற்றுலாத் திட்டம்

- ஜார்க்கண்ட் மாநில அரசானது சமீபத்தில் இந்தியாவின் முதல் சுரங்கச் சுற்றுலாத் திட்டத்தைத் தொடங்கியது.
- இது சுரங்கத் துறையில் மேற்கொள்ளப்படும் இந்தியாவின் முதல் சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையிலான தொழில்துறை சுற்றுலாத் திட்டமாகும்.

- சுரங்கத் தளங்களைத் தவிர, இதன் சுற்றுலாத் தளங்களில் பழனி நீர்வீழ்ச்சி, பற்றடு பள்ளத்தாக்கு மற்றும் திரு நீர்வீழ்ச்சி போன்ற இயற்கைத் தளங்களும் அடங்கும்.
- சுரங்கச் சுற்றுலாவை மேம்படுத்தவும், ஊக்குவிக்கவும் வேண்டி மத்திய நிலக்கரித் தளங்கள் (CCL) நிறுவனத்துடன் ஐந்து ஆண்டு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் அரசு கையெழுத்திட்டது.
- இந்தியாவின் கனிம வளத்தில் கிட்டத்தட்ட 40% அளவை ஜார்க்கண்ட் மாநிலம் கொண்டுள்ளது.
- இதன் சோதனைக் கட்டம் ராம்கர் மாவட்டத்தில் உள்ள வடக்கு உரிமாரி என்ற திறந்த வெளிச் சுரங்கத்தில் மேற்கொள்ளப்பட உள்ளது.




# விளையாட்டுச் செய்திகள்

## உலகக் காவல் மற்றும் தீயணைப்பு விளையாட்டுப் போட்டிகள் 2025



- ஜூன் 27 முதல் ஜூலை 06 ஆம் தேதி வரை அமெரிக்காவின் அலபாமாவில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டு உலகக் காவல் மற்றும் தீயணைப்பு விளையாட்டுப் போட்டிகளில்

தமிழ்நாடு காவல்துறையைச் சேர்ந்த வீரர்கள் பதக்கங்களை வென்றுள்ளனர்.

- இந்த சர்வதேசப் போட்டியில், தமிழ்நாடு காவல்துறையினர் V. தினேஷ், S. அர்ஜுன், B. ஹரிகிருஷ்ணன், V. சரண்யா மற்றும் K. இளவரசி ஆகியோர் அகில இந்தியக் காவல் அணி சார்பாகப் போட்டியிட்டனர்.
- மூன்று தங்கம், நான்கு வெள்ளி மற்றும் நான்கு வெண்கலம் என அவர்கள் மொத்தம் 11 பதக்கங்களை வென்றனர்.

# முக்கிய தினங்கள்

## சர்வதேச நெல்சன் மண்டேலா தினம் 2025 - ஜூலை 18

- அமைதி, சுதந்திரம், நீதி மற்றும் பொது சேவையை ஊக்குவிப்பதன் மூலம் நெல்சன் மண்டேலாவின் மரபை மதிக்க வேண்டும் என்பதை இந்தத் தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தென்னாப்பிரிக்காவில் முதன்முதலாக ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட அதிபர் நெல்சன் மண்டேலாவின் பிறந்தநாளை இந்த தினம் குறிக்கிறது.
- மனித உரிமைகள் மற்றும் சமத்துவத்திற்கான அவரது 67 ஆண்டுகாலப் பொதுச் சேவை மற்றும் வாழ்நாள் முழுவதுமான அர்ப்பணிப்பை இது கொண்டாடுகிறது.




## சர்வதேச நிலவு தினம் 2025 - ஜூலை 20

- இந்தத் தினமானது நிலவு குறித்த ஆய்வில் உலகளாவிய விழிப்புணர்வு, கல்வி மற்றும் ஒத்துழைப்பை ஊக்குவிக்கிறது.
- இது 1969 ஆம் ஆண்டில் அப்பல்லோ 11 விண்கலம் நிலவில் தரையிறங்கியதை நினைவு கூர்கிறது மற்றும் எதிர்கால நிலவு ஆய்வுப் பயணங்கள் மற்றும் அறிவியல் ஆர்வத்தை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு "One Moon, One Vision, One Future"

என்பதாகும்.




## சர்வதேச சதுரங்க தினம் - ஜூலை 20

- 1924 ஆம் ஆண்டு FIDE (உலகச் சதுரங்கக் கூட்டமைப்பு) நிறுவப்பட்டதை நினைவு கூர்வதற்காகவும், உலகளாவிய சதுரங்க விளையாட்டை ஊக்குவிப்பதற்காகவும் இந்த தினம் உலகளவில் கொண்டாடப்படுகிறது.
- உள்ளடக்கம், கல்வி, அதிகாரமளித்தல் மற்றும் மன நலனுக்கான ஒரு கருவியாக சதுரங்க விளையாட்டினை இது எடுத்துக்காட்டுகிறது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு "Every Move Counts" என்பதாகும்.





## தேசியக் கொடி தினம் 2025 - ஜூலை 22

- இந்த தினமானது 1947 ஆம் ஆண்டு அரசியலமைப்பு சபையால் மூவர்ணக் கொடி ஏற்றுக் கொள்ளப் பட்டதைச் சிறப்பிக்கும் விதமாகக் கொண்டாடப்படுகிறது.

- ஒவ்வொரு நாட்டின் ஒற்றுமை, துணிவு மற்றும் உண்மையின் பெரும் அடையாளமாக விளங்கும் கொடியின் அடையாளத்தை இந்தத் தினம் கொண்டாடச் செய்வதோடு, குடிமக்கள் தேசியக் கொடியின் கண்ணியத்தை மதிக்கவும், தேசிய மதிப்புகளை நிலை நிறுத்தவும் நினைவூட்டுகிறது.




## உலக மூளை தினம் 2025 - ஜூலை 22





- மூளை தொடர்பான நோய்கள் மற்றும் நரம்பியல் ஆரோக்கியம் குறித்த உலகளாவிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும்.
- உலக நரம்பியல் கூட்டமைப்பானது உலகளவில் மூளை தொடர்பான ஆரோக்கியத்தை ஊக்குவிக்க இத்தினத்தை முன்மொழிந்ததைத் தொடர்ந்து இது முதன்முதலில் 2014 ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டது.

- இந்த தினம் கல்வி, ஆதரவு, தடுப்பு, பராமரிப்புக்கான அணுகல் மற்றும் மூளை நோய் சார்ந்த ஆராய்ச்சிக்கான ஆதரவை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு "Brain Health for All Ages" என்பதாகும்.

## தேசிய ஒலிபரப்பு தினம் 2025 - ஜூலை 23

- இந்தத் தினமானது இந்தியாவில் 1927 ஆம் ஆண்டு இந்திய ஒலிபரப்பு நிறுவனத்துடன் இணைந்து ஒழுங்கமைக்கப்பட்ட வானொலி ஒலிபரப்பு தொடங்கியதைக் கொண்டாடுகிறது.
- இந்தியாவின் வானொலி மரபு மற்றும் அகில இந்திய வானொலியின் (AIR) பரிணாம வளர்ச்சியைக் கௌரவிக்கும் வகையில் இது முதன்முதலில் அனுசரிக்கப் பட்டது.
- கல்வி, தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் மக்கள் தொடர்பு ஆகியவற்றில் வானொலியின் பங்கை அங்கீகரிப்பதே இந்தத் தினத்தின் நோக்கமாகும்.





## தேசிய வருமான வரி தினம் 2025 - ஜூலை 24

- இந்தத் தினமானது இந்தியாவில் 1860 ஆம் ஆண்டில் சர் ஜேம்ஸ் வில்சனால் வருமான வரி அறிமுகப்படுத்தப் பட்டதை நினைவு கூர்கிறது.
- இந்தியாவின் வரி முறையின் வரலாற்றுப் பரிணாமத்தையும் 1922 ஆம் ஆண்டு வருமான வரிச் சட்டம் நிறுவப்பட்டதையும் இது கொண்டாடுகிறது.
- 1924 ஆம் ஆண்டு மத்திய வருவாய் வாரியம் உருவாக்கப்பட்டது மற்றும் 2009 ஆம் ஆண்டு பெங்களூருவில் மத்திய செயலாக்க மையம் (CPC) போன்ற தொழில்நுட்ப மேம்பாடுகள் போன்ற முக்கிய மைல்கற்களை அடைந்ததை இந்தத் தினம் நன்கு

அங்கீகரிக்கிறது.

❖ இந்திய நாட்டில் வெளிப்படையான, திறமையான மற்றும் குடிமக்களை மையமாகக் கொண்ட வரி நிர்வாகத்தின் முக்கியத்துவத்தினை எடுத்துக் காட்டுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.




## சர்வதேச நீதித்துறை நல்வாழ்வுத் தினம் - ஜூலை 25




❖ இந்தத் தினம் நீதிபதிகள் மற்றும் தலைமை நீதிபதிகளின் மனம் சார்ந்த, உணர்ச்சி மற்றும் உடல் நலவாழ்வின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது.

- நவ்ரு பிரகடனத்தைத் தொடர்ந்து 2024 ஆம் ஆண்டில் இந்தத் தினம் முதன்முதலில் கொண்டாடப் பட்டது மற்றும் 2025 ஆம் ஆண்டில் ஐ.நா. சபையினால் இந்த தினம் அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டது.
- நலமான மன ஆரோக்கியத்தை உருவாக்குதல், நல்வாழ்வு கொள்கைகளை மேம்படுத்துதல் மற்றும் நல்வாழ்வை நீதித் தரத்துடன் இணைப்பது இதன் நோக்கம் ஆகும்.
- உலகெங்கிலும் உள்ள சட்ட அமைப்புகளில் பேச்சுவார்த்தை மற்றும் நிறுவன மாற்றத்தை ஊக்குவிப்பதன் மூலம் உலகளாவிய நீதித்துறைச் சீர்திருத்தத்தை இது வலியுறுத்துகிறது.

## உலக நீரில் மூழ்கி உயிரிழப்பதனைத் தடுக்கும் தினம் - ஜூலை 25

- இந்தத் தினம் நீரில் மூழ்குவதன் மூலம் ஏற்படும் துயரத்தைத் தடுப்பது குறித்த உலகளாவிய விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது.
- ஆண்டுதோறும் சுமார் 2 லட்சத்திற்கும் அதிகமானோர் நீரில் மூழ்கி இறக்கின்றனர், அவற்றில் பெரும்பாலானவை குழந்தைகள் ஆவர் இதனை நிவர்த்தி செய்வதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையால் 2021 ஆம் ஆண்டில் முதன்முதலில் இத்தினம் அங்கீகரிக்கப்பட்டது.
- உலகளவில் நீர்ப் பாதுகாப்பு, நீச்சல் திறன்கள் மற்றும் வலுவான தடுப்பு உத்திகளை மேம்படுத்துவதை இந்த தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Your story can save a life" என்பதாகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★